श्रीमते लक्ष्मीहयवदनपरब्रह्मणे नमः । श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ।
श्रीमते श्रीवण्शठकोपश्रीवेदान्तदेशिकयतीन्द्रमहादेशिकाय नमः ।
श्रीमदभिनवरङ्गनाथब्रह्मतन्त्रपरकालमहादेशिकाय नमः ।

தஹராதிகரணம் - கூடார்த்தஸங்க்ரஹத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு

आविष्णोरभिवन्द्यादावाचार्याणां परम्पराम् । वेदाचार्यांश्च मे तातान् पराङ्कुशसदाह्वयान् ॥

वेदान्तदेशिकान् वन्दे यतीन्द्रांश्च कुटुम्बिनः । अहोबिलमठाधीशान् तदास्थानबुधांस्तथा ॥

लक्ष्मणार्यगुरूंश्चापि मम शास्त्रार्थबोधकान् । शब्दब्रह्मणि निष्णातान् परब्रह्मज्ञतल्लजान् ॥

नव्यरङ्गेशयोगीन्द्रान् परकालमठाधिपान् । श्रीभाष्यार्थावगाहाय तद्गूढार्थं विवृण्वतः ॥

वात्स्यो रामानुजो दासः तैत्तिरीयपथे स्थितः । नव्यवागीशयोगीन्द्र-स्वाज्ञाकार्ये नियोजितः ॥

नौमि त्रिभिश्च करणैः तत्कृपावाप्तिकाम्यया । दहराधिकृतौ किञ्चित् विवरीतुं सतां मुदे ॥

அகப், புற இருட்களைப் போக்கவல்ல நம் எம்பெருமானாரின் உயர்ந்த தர்ஶனமானது வடமொழி மற்றும் சந்தமிகு தமிழ்மறைகளின் வாயிலாக அந்தமிலா ஆரணங்களின் உட்கருத்தைத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. அதில் விஷ்ணுவின் உருவான வேதவ்யாஸமுனிவரால் இயற்றப்பட்ட ப்ரஹ்மஸூத்ரங்களுக்கு உரையான ஸ்ரீபாஷ்யம் தலைசிறந்த நூலாகும். இதற்குப் பல உரைகளும் பல ஆசார்யர்களால் இயற்றப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றான ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால மடாதிபதியாக உலகம் போற்றும் உத்தமராக விளங்கிய ஸ்ரீமதபிநவ ரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால மஹாதேஶிகனால் வடமொழியில் இயற்றப்பட்ட கூடார்த்தஸங்க்ரஹம் என்னும் உயர்ந்த, விரிவான உரையின் அருமை பெருமைகளை அனைவரும் அறிந்து ரஸித்து உய்ந்திடக் கருதி ஸ்ரீமதபிநவ வாகீஶ ப்ரஹ்மதந்த்ர பரகால மஹாதேஶிகனின் நியமனத்தைத் தலைமேற் கொண்டு, ப்ரஹ்மஸூத்ரத்தில் முதல் அத்யாயத்தின் மூன்றாம் பாதத்திலுள்ள தஹராதிகரணம் என்ற பகுதியின் கூடார்த்தஸங்க்ரஹச் சுருக்கம் இங்கு தமிழில் தரப்படுகிறது. இந்த கட்டுரையில் குறைகளைப் பொருட்படுத்தாது, ஏற்கத் தக்கதிருப்பின் அதைக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீவேதவ்யாஸர் ப்ரஹ்மஸூத்ரத்தில் முதல் அத்யாயத்தில் பரப்ரஹ்மத்தின் உலகுக்குக் காரணமாகையைத் தெளிவிக்கிறார். அதின் நான்கு பாதங்களில் முறையே காரணத்தைக் கூறும் உபநிஷத்வாக்யங்களில் முதல் பாதத்தால் மிகவும் அஸ்பஷ்டமான (மிகத் தெளிவற்ற) ஜீவாத்மா அல்லது மூலப்ரக்ருதியைக் குறிக்கும் வாக்யங்களை விசாரித்து பரப்ரஹ்மம் தான் காரணமென நிலைநாட்டுகிறார். இவ்வாறே இரண்டாவது பாதத்தில் அஸ்பஷ்டமான (தெளிவற்ற) ஜீவாத்மா அல்லது மூலப்ரக்ருதியைக் குறிக்கும் வாக்யங்களையும், மூன்றாவதில் ஸ்பஷ்டமான (தெளிவாக) ஜீவாத்மா அல்லது மூலப்ரக்ருதியைக் குறிக்கும் வாக்யங்களையும் விசாரித்து பரப்ரஹ்மம் தான் காரணமென நிலைநாட்டுகிறார். இங்கு 1.3.5வது அதிகரணமான தஹராதிகரணத்தில், தஹரவித்யையில் ஆகாஶமென்கிற சொல்லால் கூறப்படுபவன் பரமாத்மா என்று நிலைநிறுத்தப் படுகிறது.

சாந்தோக்யோபநிஷத்தில், எட்டாவது அத்யாயத்தில், अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म, दहरोऽस्मिन् अन्तर आकाशः, तस्मिन् यदन्तः तदन्वेष्टव्यं, तद्वाव विजिज्ञासितव्यम् *என்கிற வாக்யத்தில், இதயம் எனும் புண்டரீகத்தின் (செந்தாமரை) நடுவில் இருக்கும் தஹர - சிறிய - ஆகாஶம், ஐந்து மஹாபூதங்களில் ஒன்றான ஆகாஶமா, ஜீவாத்மாவா அல்லது பரமாத்மாவா என்று ஐயம் எழ, முதல் கக்ஷியாக மஹாபூதம் என்று பூர்வபக்ஷம். ஆகாஶம் எனும் சொல்லின் பொருள் ப்ரஸித்தியாலும், அதின் உள்ளே இருப்பதை தேடி அறியவேண்டுமென்று, அதை விட வேறொன்றைத் தேடி அறியச்*

சொல்லி, அதற்கு இருப்பிடமாக தஹராகாஶத்தைக் கூறி இருப்பதாலும் இந்த பக்ஷம் பொருத்தமுடைத்து என பூர்வபக்ஷயுக்தி. இதைக் கண்டிக்கிறார் दहर उत्तरेभ्यः *என்ற,* (1.3.13 *முதல்* 1.3.22 *வரை, பத்து ஸூத்ரங்களுள்ள) இந்த அதிகரணத்தின் முதல் ஸூத்ரத்தால்.*

1. दहर उत्तरेभ्यः । (1.3.13)

दहरः – *தஹராகாஶமானது, பரப்ரஹ்மம் தான், பூதாகாஶமன்று. ஏனெனில்,* उत्तरेभ्यः - *மேல் வாக்யங்களிலே சொல்லப்படுகிற காரணங்களாலே.*

இங்கு கவனிக்கவேண்டியது - अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म *என்று முன்னமே அறிந்ததை நினைவு படுத்தி,* दहरोऽस्मिन् अन्तर आकाशः, अस्मिन् - *சிறியதான ஹ்ருதய புண்டரீகத்தில்,* दहरः अन्तर आकाशः - *நடுவில் இருக்கும் ஆகாஶச் சொல்லால் கூறப்படும் பரமாத்மா,* यः - *யாவன் உள்ளான், எனச் சேர்த்து,* तस्मिन् - *அந்த தஹராகாஶ ஸ்வரூபனான பரமாத்மாவினிடத்தில்,* यदन्तः - *யாதொரு கல்யாண குணங்களின் தொகை உள்ளதோ,* तत् - *அந்த தஹராகாஶ பரமாத்மாவும், அதனுள் இருக்கும் கல்யாண குணங்களின் கூட்டமும் ஆகிய இரண்டும்,* अन्वेष्टव्यं - *உபாஸிக்க(தேட)த் தக்கது,* तत् वाव विजिज्ञासितव्यम् - *அவையே அறிய(உபாஸிக்க)த்தக்கவை. இங்கு யச்சப்தம் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது. இதை அத்யாஹாரம் என்பர். அத்யாஹாரம் இல்லாமலும் பொருள் உரைக்கலாம்.*

(गू.सं.) अत्र दहरः उत्तरेभ्यः इति पदच्छेदः सिद्धान्ते परमते च संमतः । दहरे उत्तरेभ्य इति नवीनानां पदच्छेदः, नव्यमते दहरे भूताकाशे विद्यमानः परमात्मा इति 'तस्मिन्यदन्तः' इत्यत्र अन्तश्शब्दार्थः परमात्मा । अत्र दहरे इति विग्रहकरणमात्रेण श्रुतौ द्विवारप्रयुक्तयोर्दहरशब्दयोर्मध्ये प्रथमदहरशब्दार्थः न विवक्षितः; द्वितीयदहरशब्दार्थ एव विवक्षित इत्यत्र किं गमकम्, इति विचारे 'तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यम्' इत्यन्तर्विद्यमानस्यान्वेष्यत्वप्रतिपादनमेव। द्वितीयदहरशब्दार्थ एव दहरे इति सप्तम्यन्तस्य विवक्षागमकम् ॥

अत्र 'किं तदत्र विद्यते - विजिज्ञासितव्यम्' इति प्रश्नस्य अन्वेष्टव्यजिज्ञासितव्यशब्दघटनेन प्रतिवचनं पूर्वं नोक्तमिति, 'एष आत्माऽपहतपाप्मा' इति वाक्यम् 'उत्तरेभ्य' इत्यत्र विवाक्षितमिति नवीनानामाशयः प्रतीयते ।

(தமிழ்) - இந்த ஸூத்ரத்தில் தஹர:, உத்தரேப்ய: என்று சொற்களின் பிரிவு ஸித்தாந்தத்திலும், பரமதத்திலும் (அத்வைதத்திலும்) ஏற்கப்பட்டது. புதியவர்களோ (மாத்வர்) வெனில், தஹரே, உத்தரேப்ய: எனப் பிரிக்கின்றனர். விஷயவாக்யமாகிய ஶ்ருதியில் இருமுறை தஹரமென்ற சொல் வழங்கப்பட்டு, அதில் முதலாவது இந்த ஸூத்ரத்தில் குறிப்பிடப்படவில்லை. இரண்டாவது தஹரத்தின் உள் இருப்பது தான் இங்கு குறிப்பிடப்படுவது. ஏனெனில், இரண்டாவது தஹரத்தின் உள்ளே உள்ளது தான் தேட(அறிய)த்தக்கது எனக்கூறியுள்ளதனால். இதுதான் இரண்டாம் தஹரச்சொல்லின் ஏழாம் வேற்றுமையைக் காண்பிக்கிறது.

இங்கு, किं तदत्र विद्यते विजिज्ञासितव्यम् *என்ற கேள்விக்கு, தேடத்தக்கது, அறியத்தக்கது என்ற சொற்களுடன் கூடிய பதில் முன்னம் சொல்லப்படாததால்* अपहतपाप्मा *என்ற வாக்யம்* उत्तरेभ्यः *என்னுமிடத்துக் குறிப்பிடப்படுகிறது என மாத்வர்களின் எண்ணம் எனத் தோன்றுகிறது.*

(गू.सं.) 'तदन्वेष्टव्यं, तद्वाव विजिज्ञासितव्यम्' इत्यत्र विधिः । मुक्तिपर्यन्तफलपरम्पराया उत्तरत्र प्रतिपादनेन एतद्विद्यायास्समाप्तिः समजनि 'अस्मिन्कामाः समाहिताः', 'एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्युः' इत्युत्तरवाक्यम्। तत्र 'अस्मिन्' इत्यत्र 'एष आत्मा' इति वक्ष्यमाणः आत्मैव विवक्षितः । तत उत्तरं 'तद्य इहात्मानमननुविद्य व्रजन्ति' इत्यत्र वेदनाभावे फलाभावः 'य इहात्मानमनुविद्य व्रजन्ति' इत्यत्रात्मनः कामानां च वेदनस्य फलमुक्तम्। आत्मतद्वृत्तिधर्मयोः समुच्चित्य ज्ञानस्य फलाभिधानेन विदिधातुप्रयोगेण 'तस्मिन् यदन्तस्तदन्वेष्टव्यम्, तद्वाव विजिज्ञासिव्यम्' इत्यत्र आत्मतद्वृत्तिधर्माणां समुच्चित्य ज्ञानस्यैव विधिरिति स्पष्टं निर्मत्सराणां विदुषाम् ॥

(தமிழ்) விருப்பு, வெறுப்பின்றி ஆராயுங்கால், तदन्वेष्टव्यं, तद्वाव विजिज्ञासितव्यम् என்னுமிடத்தில் தான் விதி உள்ளது. மோக்ஷம் வரையிலான பலன்களின் வரிசை மேல் கூறப்படுவதால் இந்த வித்யையின் முடிவு अस्मिन् कामाः समाहिताः என்று. மேல் வாக்யமாவது एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्युः எனத் தொடங்குவது. அங்கு 'अस्मिन् - இதில்' என்று, 'एष आत्मा - இந்த ஆத்மா' என மேல் சொல்லப்படும் ஆத்மா தான். அதன் பின்னர் எவர் இந்த ஆத்மாவையும் அதன் உண்மையான காமங்கள் எனப்படும் குணங்களையும் அறியாமல் செல்கிறார்களோ அவர்களுக்கு பலன் இல்லாமையும், அவற்றை அறிந்து பலன்களைப் பெறுவதையும் கூறுகிறது. இதனால் ஆத்மாவாகிற தர்மியையும் அதிலுள்ள தர்மங்களையும் சேர்த்து அறிதல் தான் விதிக்கப்பட்டுள்ளது என்பது விளங்கும்.

(गू.सं.) एवं च 'य इहात्मानमनुविद्य - कामचारो भवति' इति वाक्ये आत्मतद्वृत्तिधर्माणां समुच्चित्य ज्ञानस्य फलनिरूपणेन अत्रापि परमात्मतद्वृत्तिधर्मयोः समुच्चित्य वेदनमेव विवक्षितम् । 'अस्मिन्कामास्समाहिताः', 'एष आमा' इति वाक्ये अपहतपाप्मत्वादीनां कामनाविषयत्वं वर्तत इति नवीनानामपि संमतम् । अतः तत्र 'सत्यान्कामान्' इत्यत्र एतत्फलवाक्यगतपित्रादेः न कामशब्दार्थत्वं परोक्तरीत्या (ब्र.बि) युक्तम् । 'अस्मिन्कामा-स्समाहिताः', 'एतांश्च सत्यान्कामान्' इति वाक्ये ब्रह्मवृत्तिकामा एव विवक्षिताः । 'एतत्सत्यं ब्रह्मपुरमस्मिन्कामाः' इति धर्मिणि सत्यशब्दप्रयोगेण तद्गतधर्मेष्वप्यपहतपाप्मत्वादिषु तद्वदेव सत्यशब्दप्रयोगेण च धर्मिणः तद्वृत्तिधर्माणां च सत्यत्वमेकरूपं वर्तत इति बोधितम् ॥

(தமிழ்) இப்படியே ஆத்மாவாகிற தர்மியையும் அதிலுள்ள தர்மங்களையும் சேர்த்து அறிதலால் எல்லா உலகங்களிலும் காமசாரம், அதாவது, சுதந்திரத்தன்மை கிடைப்பதாகக் கூறுதல், பரமாத்மாவையும் அதன் குணங்களையும் சேர்த்தே உபாஸிக்க வேண்டுமெனக் குறிப்பிடப்படுகிறது, பரமாத்மாவின் அபஹதபாப்மா, அதாவது, எல்லாக் குறைகளுக்கும் எதிர்த்தட்டாக இருத்தல், முதலியன த்யானிக்க - விரும்பத் - தக்கன என்பது மாத்வர்களுக்கும் ஏற்புடையது. உண்மையான காமங்கள் என்ற குணங்கள் பரமாத்மாவில் உள்ளன தானே தவிர, பலத்தைச் சொல்லும் வாக்யத்தில் உள்ள தந்தை, தாய், உடன்பிறந்தோர், நண்பர்கள் முதலியன அல்ல. தர்மியிலும் அதன் தர்மங்களிலும் ஸத்யம் (உண்மை) என்ற அடைமொழி (एतत्सत्यं ब्रह्मपुरम् अस्मिन् कामाः समाहिताः, एतांश्च सत्यान् कामान्) உள்ளதாலும் அது தர்மி, தர்மங்கள் இரண்டும் ஒரே மாதிரி ஸத்யமானவை என்றும் காட்டுகிறது என அறியலாம்.

(गू.सं.) समुच्चित्योपासनावाक्ये 'उभे अस्मिन्द्यावापृथिवी' इत्यादिना पूर्वोक्ताः पृथिव्यादयः 'स यदि पितृलोककामो भवति' इत्यादिना वक्ष्यमाणपित्रादयश्च विवक्षिता इति परोक्तिर्नादरणीया । पृथिव्यादीनां कामनाविषयत्वेनानुक्तेः। केषांचित्परमात्मकामनाविषयत्वमत्रानुक्तमपि पित्रादिजीवकामनाविषयत्वमिति कल्पनमपि न श्रुतिवाक्यानुगुणम् 'एतांश्च' इत्यनेनैव परेषां विवक्षितार्थलाभस्संभवति । 'एतान् कामान्' इति पदद्वयवैयर्थ्यमेव । सिद्धान्ते तु धर्मिवत् धर्माणामपि कामनाविषयत्वं वर्तत इति बोधनाय कामशब्दप्रयोगः । इत्थं कामनाशब्दप्रयोगः तैत्तिरीयेऽपि वर्तते। 'सोऽश्नुते सर्वान्कामान्त्सह ब्रह्मणा विपश्चितेति' तत्र धर्मेषु कामनाभावे धर्मिणि कामना संभवतीति धर्माणामेव प्राधान्यं बोधयितुं 'सहे'ति ब्रह्मणः अप्राधान्यनिर्देशः ॥

(தமிழ்) இரண்டு பொருள்களைச் சேர்த்து - ஆகாஶம், அதில் உள்ளது என - உபாஸிக்க விதிக்கும் இடத்தில், उभे अस्मिन् द्यावापृथिवी, என்று முன் கூறப்பட்ட பூமி முதலியனவோ, அல்லது स यदि पितृलोककामो भवति என்றாரம்பித்து கூறப்பட்ட தந்தை முதலியவர்களோ உபாஸிக்கத்தக்கவை எனும் பரமதக்கூற்று ஏற்கத்தகாதது. ஏனெனில், பூமி முதலியவற்றை விரும்பத்தக்கதெனக் கூறாததால். एतांश्च என்பதனாலேயே இது கிடைப்பதால் एतान् कामान् என்ற இரண்டு சொற்கள் வீணாகின்றன. ஸித்தாந்தத்திலோவெனில், தர்மியையும் அதன் தர்மங்களையும் ஒரே மாதிரி உபாஸிக்க கூறுவதற்காக, காம - விரும்பத்தக்கது - ஶப்தம் வழங்கப்பட்டது. இது தைத்திரீயத்திலும் सोऽश्नुते सर्वान् कामान् सह। ब्रह्मणा विपश्चितेति என்று தர்மங்களில் உபாஸிக்கப்படுதல் சொன்னால் தர்மியில் தானாகவே அது - காமநா விஷயத்வம், அதாவது, விருப்பத்தின் இலக்கு - ஸித்திக்கும் என்று தெரிவிக்கவே தர்மியை -

ப்ரஹ்மத்தை - ஸஹ என்கிற முக்கியமல்லாத தன்மையைக் குறிக்கும் சொல்லால் குறிப்பிட்டுள்ளது.

(गू.सं.) एवमानन्दमयब्रह्मविद्यायाम् 'आनन्दं ब्रह्मणो विद्वान्' इति निर्देशेऽपि गुणानामुक्तप्राधान्यविवक्षयैवेति भाष्य एव व्यक्तम् । एतेन 'दहरोऽस्मिन्नन्तर....व्यमिति वाक्येऽपि उत्तरैतद्वाक्यानुरोधेन समुच्चित्योपासनविवक्षायाः परेषामपि संमततया समुच्चित्योपासने विवक्षिते अन्तस्थपदार्थानामुपासनविधाने गुणानामुक्तप्राधान्यविवक्षैव मूलमिति सिद्धान्ते कामशब्देन सूचितं भवति । परमते तस्य वैयर्थ्यमेव, अतः 'अस्मिन्कामास्समाहिताः', 'एतांश्च सत्यान्कामान्' इत्युभयत्र कामशब्दनिर्देशेन 'अस्मिन्कामाः' इति सप्तम्यन्तनिर्देशेन च उपक्रमे गुणानां प्राधान्यविवक्षयैव 'तस्मिन्यदन्त' इत्यन्तश्शब्दार्थप्रधानकनिर्देशः ।

(*தமிழ்*) *ஆநந்தமயவித்யையிலும்* आनन्दं ब्रह्मणो विद्वान्, न बिभेति कदा(कुतः)चनेति *என்று ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை அறிபவன் எதினிடமிருந்தும், எப்போதும் பயப்படுவதில்லை முதலிய வாக்யங்கள் ப்ரஹ்மத்தின் குணங்களே உபாஸிக்கத்தக்கதில் முக்கியமானவை என அறிவிக்கின்றன. அவ்வாறே இங்கும் ஶரீரத்தில் சிறிய ஆகாஶம், அதனுள் உள்ளது தேடவும் - உபாஸிக்கவும் - நன்கு அறியவும் தகும் என்னுமிடத்து மேல் வாக்யங்களில் சொல்லும் குணங்களுடன் சேர்ந்தே உபாஸனம் விதிக்கப்படுகிறதென பரர்களும் இசைவதால், ப்ரஹ்மகுணங்களை உபாஸ்யமாக ஏற்காவிடில்,* अस्मिन् कामाः समाहिताः, एतांश्च सत्यान् कामान् *என்கிற வாக்யங்கள் வீணாகும். காமஶப்தமும், அதனுள் உள்ளது என்ற ஏழாம் வேற்றுமையும்,* तस्मिन् यदन्तः *என்று தொடக்கத்திலிருந்தே குணங்களே முக்கியமாக உபாஸிக்க வேண்டுபவை என உறுதி ஆகிறது.*

(गू.सं.) नवीनमतेऽपि 'य आत्माऽपहतपाप्मा' इति वाक्यस्योत्तरवाक्यतया उपादानेनात्र अपहतपाप्मत्वादिगुण-विशिष्टोपासनस्यैवोक्त्या 'तद्य इहात्मानमनुविद्य वजन्त्येतांश्च सत्यान्कामान्' इत्यत्र समुच्चित्योपासनस्य स्पष्टमुक्त्या गुणविशिष्टगुण्युपासनमेव 'तस्मिन्यदन्तः' इत्यत्र विवक्षितमिति वाच्यम्; एवं स्थिते 'दहरोऽस्मिन्नन्तर आकाशः तस्मिन्यदन्तस्तदन्वेष्टव्यम्' इति वाक्येन श्रुत्यन्तरानुरोधेन भूताकाशस्थपरमात्मोपासनमेव विवक्षितमित्यभिप्रेत्य अन्तशब्दार्थः परमात्मेति निर्णयोऽपि निरवकाशः । समुच्चितोपासनपूर्वकं 'अस्मिन्कामास्समाहिताः' इति वाक्ये 'अस्मिन्' इति सप्तम्यन्तेन 'तस्मिन्यदन्तः' इत्येतद्वाक्यार्थसमान एवात्रापि वाक्यार्थ इति स्फुटप्रतीत्या तथा विवक्षाऽङ्गीकारे दोषाभावात् ।

(*தமிழ்*) *புதியவர்களின் மதத்திலும்,* य आत्माऽपहतपाप्मा *என்ற வாக்யத்தை அடுத்து* तद्य इहात्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान् *என்னுமிடத்து, சேர்த்து உபாஸனம் தெளிவாகக் கூறப்படுவதால்* तस्मिन्यदन्तः *என்றவிடத்தில் குணங்களுடன் கூடிய குணியின் உபாஸனம் தான் சொல்லப்படுகிறது என ஏற்கவேண்டும். அப்போது, ஆகாஶாதிகரணப்படி பூதாகாஶத்தில் உள்ள பரமாத்மாவை உபாஸிப்பது போல், இங்கும் தஹராகாஶத்தில் உள்ள பரமாத்ம-உபாஸநம் தான் கருதப்படுகிறது என்றும், அந்த: என்னும் சொல்லுக்கு பரமாத்மா என்ற தீர்மானமும் கூடாது. குண, குணிகளின் சேர்ந்த உபாஸநத்தை விதிக்கும்* अस्मिन् कामाः समाहिताः *என்னுமிடத்து* अस्मिन् *என்ற ஏழாம் வேற்றுமையும்* तस्मिन् यदन्तः *என்று கூறும் வாக்கியத்துடன் ஒத்திருப்பதால் முன்கூறிய பொருளே ஏற்கத்தக்கது.*

(गू.सं.) श्रुत्यन्तरादस्याश्श्रुतेः वैलक्षण्यमपि प्रतीयते 'अथ यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म' इत्यनेन नगरप्रतीत्या राजा प्रतीयते । अत एव 'यथाऽनुशासनम्' इत्युत्तरत्र राजशासनकीर्तनमपि सङ्गतम् । 'एतस्य वा अक्षरस्य प्रशासने' (बृ) इति श्रुत्यन्तरानुगुणं च । 'दहरं पुण्डरीकं वेश्म' इति वेश्मशब्दनिर्देशः राजगृहतात्पर्येण, एवमर्थस्याविवक्षितत्वेन नवीनोदाहृतश्रुत्यन्तरैकार्थ्यं नैव विवक्षितमिति प्रतीयत इति भूताकाशस्य न 'दहरोऽस्मिन् अन्तर आकाशः' इत्यत्र विवक्षा । एतेन 'दहरे' इति पदच्छेदोऽपि न सूत्रकाराभिमतः ।

(*தமிழ்*) *மற்ற ஶ்ருதிகளைக் காட்டிலும் இங்கு ஒரு தனித்தன்மையும் காணப்படுகிறது. ப்ரஹ்மபுரம் என்று நகரத்தைச் சொல்வதால் ராஜா உளன் என ஏற்படும். அதனாலேயே மேல் வரும்* यथाऽनुशासनम् *என்று ராஜகட்டளையைச் சொல்வதும் பொருந்தும். வேறு ஶ்ருதிகளில்* एतस्य वा अक्षरस्य प्रशासने

முதலிய வாக்யங்களுடனும் சேரும். தஹரம் புண்டரீகம் வேஶ்ம என்று வேஶ்ம ஶப்தம், வீடு, அதாவது அரண்மனையைக் குறிக்கிறது என்றவாறு புதியவர்கள் கூறும் வேறு ஶ்ருதியின் ஒற்றுமை, இவ்வாறான அபிப்ராயத்தைச் சொல்ல இந்த ப்ரகரணம் வராததால், दहरोऽस्मिन् अन्तर आकाशः *என்ற இடத்தில் பூதாகாஶம் கூறப்படவில்லை. இதனால் தஹரே என்று பதத்தைப் பிரிப்பதிலும், அவ்வாறு ஶ்ருதி இல்லையாதலாலும், தஹர: என்று முதலாம் வேற்றுமையே சொல்லப்பட்டிருப்பதாலும் ஸூத்ரகாரருக்கு உடன்பாடில்லை.*

(गू.सं.) तथा श्रुत्यभावात् प्रथमान्ततयैव दहरशब्दस्य सत्वात् 'अल्पश्रुतेः' इति सूत्रे 'अर्भकौकस्त्वात्' इति सूत्रे च 'निचाय्यत्वात्' इत्युक्तार्थस्य विवक्षा नवीनानामपि संमता । तत्र 'अर्भकौकस्त्वात्' इत्यत्र ओकशब्दः गृहवाची। तत्र अर्भकः ओकः अल्पपरिमाणः इत्येकोऽर्थः । 'अल्पौकस्त्वात्' इत्यनेनैव तथाऽर्थसम्भवे एवं निर्देशवैयर्थ्या-न्यथानुपपत्त्या अर्भकस्य यदोकः तदेव परमात्मन ओकः इत्यर्थस्य सूत्रकृतो विवक्षितत्वेन शाण्डिल्यविद्यावाक्यवत् अत्रापि हृदयरूपाल्पपरिमाणदेशसम्बन्धस्य एतन्मन्त्रे परमात्मनि प्रतिपादनेन जीवस्य हृदयसम्बन्धस्य श्रुतिषूक्त्या तत्रैव परमात्मनोऽपि हृदयसम्बन्धस्य प्रतिपादनस्यापि इत्थमेव तात्पर्यामवसेयम् । अतश्च तदनुसार्येवार्थः । एतेन आकाशशब्दार्थस्य परमात्मत्वं श्रुतौ विवक्षितमिति सिद्धम् ॥

(தமிழ்) மேலும், अल्पश्रुतेः, *மற்றும்* अर्भकौकस्त्वात् *என்ற ஸூத்ரங்களில்* निचाय्यत्वात् *என்று சொல்லப்பட்ட த்யானத்துக்காக குறுகிய இடத்தில் உள்ளமை சொல்லிற்று என்பது புதியவர்களுக்கும் ஸம்மதம்.* अर्भकौकस्त्वात् *என்றவிடத்தில் ஓக: என்பது வீடு என்று பொருள்படும். அப்போது* अर्भकौकस् *என்பது சிறிய அளவைக் குறிக்கும். ஆனால்,* अल्पौकस्त्वात् *என்றாலே இந்த பொருள் ஏற்படுமாதலால்,* अर्भकौकस्त्वात् *என்று ஸூத்ரகாரர் குறிப்பிட்டதற்குக் காரணத்தை ஆராயுங்கால், அர்பகத்துக்கு எது இடமோ அதுவே பரமாத்மாவுக்கு இடம் என்று, ஶாண்டில்யவித்யை வாக்யப்படி இங்கும் இதயமாகிய சிறிய இடத்தில் பரமாத்மா இருக்கிறான் என்றும், அதுவே ஜீவனுக்கும் இடமாக ஶ்ருதிகள் சொல்வதால் அங்கேயே பரமாத்மாவுக்கும் இதயத்துடன் ஸம்பந்தம் கூறப்பட்டு, ஆகாஶ ஶப்தத்துக்கு பரமாத்மா தான் பொருள் என்று கிடைக்கிறது.*

(गू.सं.) तत्र सर्वत्रप्रसिद्ध्यधिकरणे 'विवक्षितगुणोपपत्तेश्च' इतिसूत्रे गुणानामभिधानेनात्रापि अपहतपाप्मत्वादिगुणानां प्राधान्येन विवक्षा सूत्रकृदभिमतेति सिद्ध्यति । एतेन राजकुमारनयस्य द्रमिडाचार्यसंमतस्य श्रुतिसूत्रतात्पर्यविषयता सिद्धा । अत एव अपहतपाप्मत्वादिगुणानां जीवेऽपि संभवः जीवस्य ज्ञानानन्दाद्याविर्भावश्चात्र वक्ष्यमाणः राजकुमार-न्यायमुपोद्बलयति । तदेतत्सर्वमभिसन्धायैव 'उत्तरेभ्यः' इति बहुवचननिर्देशः ।

(தமிழ்) ஸர்வத்ரப்ரஸித்த்யதிகரணத்தில், विवक्षितगुणोपपत्तेश्च *என்ற ஸூத்ரத்தில், குணங்கள் கூறப்பட்டுள்ளதால், இங்கும் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களை முக்கியமாக ஸூத்ரகாரர் கருதுவது தெளிவு. இதனால் த்ரமிடாசார்யர் ஏற்ற ராஜகுமாரந்யாயம், ஶ்ருதி மற்றும் ஸூத்ரங்களின் கருத்து தான் என்றேற்படுகிறது. அதனால் தான் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் ஜீவனிலும் பொருந்துவது, ஜீவனுக்கு ஜ்ஞானம், ஆநந்தம் முதலியன தடை நீங்கிப் புலப்படுதல் மேலே கூறப்படுவது ராஜகுமாரந்யாயத்தை வலுப்படுத்துகிறது. இதையெல்லாம் எண்ணியே உத்தரேப்ய: என்று பன்மை வழங்கிற்று.*

(गू.सं.) एतमेव सर्वमभिप्रेत्याचार्यपादैः 'दहरकुहरे देवस्तिष्ठन् निषद्वरदीर्घिका निपतितनिजापत्यादित्सावतीर्णपितृ-क्रमात् । धमनिमिह नस्तस्मिन्काले स एव शताधिकामकृतकपुरप्रस्थानार्थं प्रवेशयति प्रभुः ॥' इत्यनुगृहीतम् । दहरविद्यायां 'शतं चैका च' इति श्रुतौ मूर्धन्यनाड्या गमनं वक्ष्यते । 'हार्दानुगृहीतश्शताधिकया' इति सूत्रम् ।

(தமிழ்) ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தின் தொடக்கத்தில், ராஜகுமார ந்யாயம், ஒரு ராஜகுமாரன், ராஜா வேட்டைக்குச் செல்லும்போது, அவனிடமிருந்து பிரிந்து, வழி தவறி, வேடர்களால் காப்பாற்றப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்து, வெகு காலத்திற்குப் பிறகு, சில தார்மிகரும் ஆசார்யர்களும் நேர்பட்டு,

அதனால் ராஜாவுடன் சேர்வது, அவனுக்கு வாரிசாதலால் எல்லா வசதிகளும் பெறுவது வரை விவரிக்கப்பட்டுள்ளது. ஸமந்வயாதிகரணத்தில் பாஷ்யத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ரஹஸ்யத்ரயஸாரத்தில் மேலும், தஹரகுஹரே என்றாரம்பிக்கும் ஶ்லோகத்தில், எம்பெருமான், இதயத்தின் சந்தினில் நின்று, ஜீவாத்மாவை, சேறு நிரம்பிய, ஆழமான, கிணற்றில் விழுந்த, தன் குழந்தையைத், தகப்பன், அதனுள் குதித்து, அதிலிருந்து வெளிக்கொணருமாறு, இதயத்தின் 101 நாடிகளில், மேல் நோக்கிச் செல்லும் 101வதான ஸுஷும்நா நாடியை, கலங்காப் பெருநகரான வைகுண்டத்துக்கு அழைத்துச் செல்ல, நுழைவிக்கிறான் எனக்கூறியுள்ளார். தஹரவித்யையில், शतं चैका च हृदयस्य நாड्यः, *நூறும் ஒன்றும் இதயத்தின் நாடிகள், என்ற ஶ்ருதியில், மூர்த்தந்ய நாடியால் வைகுண்டம் போவது சொல்லப்படும்.* हार्दानुगृहीतः शताधिकया *என்று ஸூத்ரம்.*

(गू.सं.) अत्र 'यदिदमस्मिन्ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म दहरोऽस्मिन्नन्तर आकाशः' इति सर्वजनहृदयवर्तित्वमेव प्रतिपादयति । तेन 'सर्वभूताधिवासं मां .... सर्वानुग्राहकत्वेन' इति श्रुत्युक्तार्थः अत्रापि विवक्षित इति प्रतीयते। भूतेषु वासस्य सर्वानुग्राहकत्वोक्त्या एतच्छ्रुत्यनुसारेणैव 'हार्दानुगृहीतः' इति सूत्रकृदुक्तिश्च । ईक्षतिकर्माधिकरणे ध्यानस्य यत्फलं तदपि सर्वेषां सममेव, न तु तरतमभावापन्नं, नापि क्रममुक्तिफलकमित्यपि सिद्ध्यति । एवं 'ससामभिः .... ब्रह्मलोकम्' इत्यत्र ब्रह्मलोकोऽपि न चतुर्मुखलोकः प्राप्यब्रह्मणि पुरुषशब्दप्रयोगात् 'एष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परंज्योतिरूपसंपद्य' इत्यादौ 'स उत्तमः पुरुषः' इत्यत्र उत्तमपुरुषशब्दप्रयोगेण 'अस्माल्लोकात्समुत्थाय' इत्युत्क्रान्तिपूर्वकगमनस्याभिधानेन 'जक्षन्क्रीडन्रममाणः' इति क्रियाप्रतिपादनेन च प्राप्यब्रह्मलोकः परब्रह्मलोक एव नापरब्रह्मलोक इति निश्चयसम्भवात् ॥

(*தமிழ்*) *இங்கு,* अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म, दहरोऽस्मिन् अन्तर आकाशः, *என்று எல்லா ப்ராணிகளின் ஹ்ருதயத்தில் இருப்பதைத் தான் சொல்கிறது. அதனால்* सर्वभूताधिवासं मां .... सर्वानुग्राहकत्वेन, *என்ற ஶ்ருதியின் பொருள் இங்கும் பொருந்தும். எனவே தான் பூதங்களில் இருப்பது அனுக்ரஹிக்கத் தான் என ஸூத்ரகாரர்* हार्दानुगृहीतः *என்றார். ஈக்ஷதிகர்மாதிகரணத்தில், த்யானத்துக்குப் பலனாகச் சொல்லப்பட்டதும், எல்லோருக்கும் ஸமம் தான், ஏற்றக்குறைவு உள்ளதன்று, வரிசையாக மோக்ஷத்தைக் கொடுப்பதும் அல்ல என்றும் ஏற்படுகிறது. இப்படி,* ससामभिः .... ब्रह्मलोकम् *என்றவிடத்து, ப்ரஹ்மலோகம் என்பது சதுர்முகப்ரஹ்மாவின் உலகம் அல்ல, அடையும் ப்ரஹ்மத்துக்கு புருஷன் என்ற அடைமொழி உள்ளதால்.* एष सम्प्रसादोऽस्माच्छरीरात् समुत्थाय परंज्योतिरुपसम्पद्य .... स उत्तमः पुरुषः, *என்று உத்தமபுருஷனென்னும் சொல்லை வழங்கியதால்,* अस्माल्लोकात् समुत्थाय *இந்த உலகிலிருந்து மேற்கிளம்பி என்று ப்ரக்ருதியை மீறிச் செல்தலும், சென்றபின்* जक्षन् क्रीडन् रममाणः *என்று பல செயல்களைச் சொல்லியிருப்பதனாலும், ப்ராப்யமாக அடையப்படும் ப்ரஹ்மலோகம், பரப்ரஹ்மலோகம் தான், சதுர்முகலோகம் அல்ல எனத் தீர்மானிக்கலாம்.*

(गू.सं.) 'स्वेन रूपेणाभिनिष्पद्यते' इति स्वरूपाविर्भावस्य ज्ञानानन्दादिसाम्यपर्यवसिताया सिद्धान्तयिष्यमाणतया भूमविद्यायां 'सर्वं ह पश्यः पश्यति' इत्युपक्रमदर्शनं मुक्तिकालिकमेव । प्रश्नोपनिषद्यपि 'स सर्वज्ञः' इति मुक्तस्य सर्वज्ञत्वं द्वेधा प्रतिपाद्यत इति ईक्षतिकर्माधिकरणे सोऽर्थो विवक्षितः । 'परात्परं पुरिशयं पुरुषमीक्षते' इत्यत्र सर्वशरीरिपुरुषेक्षणं सर्वेक्षणमन्तरा न घटत इति तत्रापि सर्वसाक्षात्कारो विवक्षितः ॥

(*தமிழ்*) स्वेन रूपेणाभिनिष्पद्यते, *தன்னுடைய ஸ்வரூபத்தை அடைகிறான் என்பது தனக்கு இயற்கையாக ஏற்பட்ட வடிவு, பண்பு முதலிய பொருளைக் கொடுப்பதால், ஜ்ஞானம், ஆனந்தம் முதலியவற்றில் நிகராதல் தான் மோக்ஷம் என்று ஸ்தாபிக்கப்போவதால், பூமவித்யையில்,* सर्वं ह पश्यः पश्यति, *என்று தொடங்கி சொன்னது முக்திதசையில் தான். ப்ரஶ்நோபநிஷத்திலும்* स सर्वज्ञः *என்று முக்தனுக்கு ஸர்வஜ்ஞத்வம் இருவகைப்பட்டதாகச் சொல்லப்படுகிறதென, ஈக்ஷதிகர்மாதிகரணத்தில், அந்த பொருள் உரைக்கப்பட்டது.* परात्परं पुरिशयं पुरुषमीक्षते *என்றவிடத்து, ஸர்வஶரீரியான புருஷனைப் பார்த்தல், எல்லோரையும் பார்க்காமல் முடியாதென அங்கும் ஸர்வஸாக்ஷாத்காரம் கூறப்பட்டது.*

(गू.सं.) एतेन द्युभ्वाद्यधिकरणे परमसाम्यश्रुतेः सर्वविषयज्ञानानन्दवत्त्वेन साम्यपरत्वमधिकरणचतुष्टये विषयवाक्यश्रुतिपर्यालोचनायां निर्मत्सरैरवश्यमङ्गीकरणीयमिति सिद्धम् । ततश्च दहरविद्या सगुणविद्या भूमविद्या निर्गुणविद्येति परेषां कल्पना निरवकाशा ॥

(தமிழ்) இதனால், த்யுப்வாத்யதிகரணத்தில், பரமஸாம்யம் சொன்னது, எல்லாவற்றையும் விஷயீகரிக்கும் ஜ்ஞாநாநந்தம் உடைமையால், ஸாம்யம் - ஒத்திருத்தல், என்று நான்கு அதிகரணங்களின் விஷயவாக்யமாகிற ஶ்ருதிகளைப் பராமர்ஶித்தால், ஏற்கத்தக்கதென விளங்கும். அதனால் தஹரவித்யை ஸகுணவித்யை, பூமவித்யை நிர்குணவித்யை என்ற பரரின் கற்பனைக்கு இடமில்லை.

2. गतिशब्दाभ्यां तथा हि दृष्टं लिङ्गं च । (1.3.14)

(गू.सं.) 'गतिशब्दाभ्यां तथा हि दृष्टं लिङ्गं च' - 'य इहात्मानमननुविद्य व्रजन्त्येतांश्च सर्वान्कामान् तेषां सर्वेषु लोकेष्वकामचारो भवति', 'य इहात्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान्कामान् तेषां सर्वेषु लोकेषु कामचारो भवति' इत्यत्र धर्मधर्म्युभयवेदनतदभावयोः फलभेदः प्रतिपादितः । तत्रोभयवेदनस्य ध्यानपर्यवसितस्य मुक्तिः फलमिति पूर्वमभिहितम् । अत्र वेदनस्य संभावनासत्त्वेऽपि वेदनप्रतिबन्धकसद्भावात् वेदनं न सुलभमिति मनसि निधाय वेदनस्य संभावितत्ववाक्योक्तहेतुनाऽपि परमात्मपरत्वं दहराकाशस्य सिद्ध्यतीत्याह - गतिशब्दाभ्यामिति ॥

(*தமிழ்*) य इहात्मानमननुविद्य व्रजन्त्येताँश्च सत्यान्कामान् तेषां सर्वेषु लोकेष्वकामचारो भवति, य इहात्मानमनुविद्य व्रजन्त्येताँश्च सत्यान्कामान् तेषां सर्वेषु लोकेषु कामचारो भवति, *என்று தர்மம், தர்மி இரண்டினுடைய அறிதல், மற்றும் அறியாமையின் வேறுபாடு ப(ஃப)லத்தில் காட்டப்பட்டது. அதில் இரண்டையும் அறிந்து, அதாவது, த்யானம் செய்து, முக்தியை அடைகிறான் என முன்பு காட்டப்பட்டது. இங்கு அறிதல் கூடுமானாலும், அதற்கு இடையூறுகள் நேரலாமாதலால், அது எளிதல்ல எனக் கருதி, அறிதல் கூடும் என்னுங்கால் கூறப்பட்ட காரணத்தாலும், தஹராகாஶம் பரமாத்மா எனக் கிடைக்கிறதென இந்த ஸூத்ரம் அறிவிக்கிறது.*

(गू.सं.) 'एवमेवेमास्सर्वाः प्रजाः - अनृतेन हि प्रत्यूढाः' इति श्रुतिः । 'त इमे सत्याः कामाः' इति चात्रैव श्रुतिः इदं च श्रुतिद्वयं धर्मिणां धर्माणां च कर्मणा प्रतिबन्धके ज्ञानाभावपरम् । 'सर्वाः प्रजा अहरहर्गच्छन्त्यः' इति वेदनस्य संभावितत्वप्रदर्शनपरम् । गमनं च नाडीपूर्वकपुरीतद्देशगमनकालिकम् । 'ताभिः प्रत्यवसृप्य पुरीतति शेते' इत्यर्थस्य 'तदभावो नाडीषु तच्छ्रुतेरात्मनि च' इत्युपपादयिष्यमाणत्वात् । 'ब्रह्मलोकम्' इत्यत्र लोकशब्दः 'लोकृ दर्शने' इति धातुना निष्पन्नः साक्षात्कारयोग्यपरः । योग्यता च सुषुप्तौ इन्द्रियाणां विषयान्तरासङ्गेनैव इन्द्रियाणां विषयान्तरसम्बन्धाभावमात्रं न ब्रह्मसाक्षात्कारसाधकं भवति, कर्मरूपप्रतिबन्धकसद्भावात् कर्म च भगवन्निग्रहरूपं भगवच्छासनानुरोधेनैव भगवदनुग्रह इति पूर्वं 'यथा ह्येवेह प्रजा अन्वाविशन्ति यथाऽनुशासनम्' (छां.८.६.५) इत्युक्तम्, शासनानुवृत्तिश्च धर्मधर्म्युभयविषयवेदनसत्त्व एवेति भगवन्निग्रहरूपकर्मसद्भावेनैव साक्षात्काराभावः । एवमर्थविरोधस्यात्र उक्तौ 'एष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते' इति कर्मबन्धविनिर्मुक्तस्य अप्राकृतदेशविशेषे दिव्यमङ्गलविग्रहविशिष्टसम्पत्तिकाले वक्ष्यमाणस्य साक्षात्कारस्य च वैलक्षण्यं प्रतिपादितं भवति । एतेन सुषुप्तिकालिकगमनस्य मुक्तिकालिकगमनस्य च विशेषः श्रुतौ प्रतिपादितो भवति । तेन यथा सुषुप्तिकाले परमात्मगमने दुःखाभावमात्रम्, ज्ञानानन्तरकालिकगमनकाले तु स्थिरसुख-साक्षात्कारोऽपि । एवमर्थबोधनं श्रुतौ लोकशब्देन प्रतीयते । गतिः ब्रह्मलोकशब्दः ब्रह्मशब्दपर्यवसित इत्युभयं 'गतिशब्दाभ्याम्' इत्यत्र विवक्षितम् । 'तथाही'ति पदं पूर्वोक्तार्थोपपादक एवोत्तरग्रन्थ इति बोधकम् । अत एव 'दृष्टं लिङ्गं च' इति गतिशब्दरूपार्थद्वयमेवाभिप्रैति । 'दृष्ट'मिति पदोपादानं तु श्रुत्यन्तरोक्तत्वतात्पर्येण दृशिधातोः श्रुत्यन्तरबोधतात्पर्येण सूत्रे प्रयोगात् । श्रुत्यन्तरे 'सता सोम्य तदा संपन्नो भवति' इति ब्रह्मगमनस्यैव प्रतिपादनेन 'अहरहर्गच्छन्त्यः एतं ब्रह्मलोकम्' इत्यत्रापि ब्रह्मगमनमेव विवक्षितम् । न ब्रह्माधिकरणदेशगमनम् । 'लिङ्गं च' गमनं शब्दश्चेत्युभयमपि दहरस्य परमात्मत्वे लिङ्गं च भवतीत्यर्थः ॥

(*தமிழ்*) एवमेवेमाः सर्वाः प्रजाः .... अनृतेन हि प्रत्यूढाः *என்று ஒரு ஶ்ருதி. இங்கேயே* त इमे सत्याः कामाः,

என்றுள்ளது. இவ்விரண்டு ஶ்ருதிகளும் தர்மிகளும் தர்மங்களும் கர்மாவினால் தடைப்படும்போது அறிவின்மையைக் காட்டுகின்றன. सर्वाः प्रजाः अहरहर्गच्छन्त्यः, *என்று அறியக்கூடும் என்ற பொருளைத் தெரிவிக்கின்றன. அதாவது, ஒவ்வொரு நாளும் செல்கின்றன என்பதால் என்றாவது ஒருநாள் அறியப்படலாம் என்றவாறு. செல்லுதலும் நாடிகளை முன்னிட்டுக் கொண்டு புரீதத் என்னும் இடத்தை அடையுங்காலாகும்,* ताभिः प्रत्यवसृप्य पुरीतति शेते, *என்பதை* तदभावो नाडीषु तच्छ्रुतेरात्मनि च *என்று விளக்கபோவதால்.* ब्रह्मलोकम्, *என்றவிடத்து, லோகம் என்பது,* 'लोकृ दर्शने' *என்ற வினையடிச்சொல்லால் உண்டாகி, நேராகக் காணத்தக்கதைக் கூறுகிறது. காணத் தகுதியோவெனில் ஸுஷுப்தி - அதாவது, ஆழ்ந்த தூக்கத்தில் - இந்த்ரியங்கள் வேறு பொருட்களுடன் சேராதிருப்பதால் ஆகும். ஆனால் இந்த்ரியங்கள் வேறு பொருட்களுடன் சேராதிருப்பதால் மட்டும் ப்ரஹ்மத்தை நேராகக் காண இயலாது. கர்மாவாகிற தடை இருப்பதால். கர்மாவோவெனில் பகவானுடைய நிக்ரஹம், அதாவது, கோபம். பகவானின் ஆணையை மீறாதிருப்பதால் பகவான் அருள, அவ்வருளால் காணலாகும் என்று* यथा ह्येवेह प्रजा अन्वाविशन्ति यथाऽनुशासनम् (छा. 8.6.5), *என்றவிடத்து கூறப்பட்டது. ஆணையை அடிபணிதலும் தர்மம், தர்மி இரண்டையும் பற்றிய அறிவினாலேயேயாதலால் பகவந்நிக்ரஹமாகிய கர்மா இருக்கும் வரை ஸாக்ஷாத்காரம், அதாவது, நேரக்காணல், கூடுவதில்லை. இப்படிப் பொருளில் வேறுபாடு இங்கு* एष सम्प्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते *என்று கர்மாவின் பிணைப்பு நீங்கப் பெற்றபோது அப்ராக்ருதமான ஒரு தேஶத்தில் சென்று, திவ்யமங்களவிக்ரஹத்துடன் கூடிய எம்பெருமானை அடைதல், மற்றும் அப்போது நேராகக் காணல், இங்கு ஆழ்ந்த தூக்கத்தில் பரமாத்மாவிடம் செல்லுதலைக் காட்டிலும் வேறு எனத் தெளிவாகிறது. இதனால் ஸுஷுப்தியில் பரமாத்மாவை அடையும்போது துக்கமின்மை மட்டும் உண்டாகி, உபாஸநத்தின் பின் மோக்ஷத்தை அடையும்போது, நிலையாக ஆநந்தமும், நேரக்காண்தலும் ஏற்படுகின்றன என்றதாயிற்று. இப்பொருள் ஶ்ருதியில் லோகஶப்தத்தால் கிடைக்கிறது. ஆக, கதி, அதாவது, செல்லல், மற்றும் ப்ரஹ்மலோக ஶப்தம் ப்ரஹ்மத்தையே குறித்தல், இவ்விரண்டும்* गतिशब्दाभ्याम् *என்றவிடத்துக் கொள்ள வேண்டும்.* तथाहि *என்ற சொல், மேற்கூறிய பொருளையே மேல்வரும் சொற்கள் விளக்குகின்றன எனக் காட்டுகிறது. அதனால் தான்,* दृष्टं लिङ्गं च *என்று கதி, மற்றும் ஶப்தம் என்கிற இரண்டையும் தெரிவிக்கிறது.* दृष्टम् *என்ற சொல்லானது, வேறு ஶ்ருதியில் கூறப்பட்டதை உணர்த்துகிறது. வேறு ஶ்ருதியாவது,* सता सोम्य तदा सम्पन्नो भवति *என்று ப்ரஹ்மத்திடம் செல்வதையே குறிப்பதால்,* अहरहर्गच्छन्त्य एतं ब्रह्मलोकम् *என்னுமிடத்திலும், ப்ரஹ்மத்திடம் செல்வதே குறிக்கப்படுவதாக ஏற்படுகிறதே தவிர, ப்ரஹ்மத்தின் இருப்பிடமான தனிப்பட்ட தேஶம் என அல்ல.* लिङ्गं च *என்பதால் செல்லுதல், மற்றும் லோகம் என்கிற சொல், இவ்விரண்டும், தஹரம் பரமாத்மா, என அறியப் போதுமான அடையாளமாகிறதெனத் தெளிவிக்கிறது.*

3. धृतेश्च महिम्नोऽस्यास्मिन्नुपलब्धेः । (1.3.15)

(गू.सं.) 'धृतेश्च महिम्नोऽस्यास्मिन्नुपलब्धेः' सूत्रे अस्येत्युक्तेरेवमाशयः । अस्य पूर्वमक्षरवाक्ये प्रतिपन्नस्य परमात्मनो या धृतिः महिमरूपा तस्यास्मिन्नुपलब्धेरित्यर्थः । एतेन अक्षरवाक्यविषयभूतं दहरवाक्यविषयभूतं चैकमेव एकत्र सगुणरूपमन्यत्र निर्गुणरूपत्वं नास्तीति सूच्यते । 'धृतेश्च' इत्यनभिधाय 'धृतेश्च महिम्न' इत्यभिधानेन धृतिरूपमहिमा तदतिरिक्तप्रहिमा च इति चशब्देन समुच्चीयते धृतिः शासनाधीना अक्षराधिकरणे निर्णीता ।

(*தமிழ்*) *இந்த ஸூத்ரத்தில்* अस्य *என்று சொன்னதன் கருத்து - அஸ்ய, முன் அதிகரணத்தில் ஏற்பட்ட பரமாத்மாவின், மஹிமையான, அதாவது, பெருமையான, த்ருதி, அதாவது, தாங்குதல், இங்கு காண்பதால், எனப் பொருள். இதனால், அக்ஷரவாக்யத்திலும், தஹரவாக்யத்திலும் விஷயமானது ஒன்றே என்றதாம். ஓரிடத்தில் ஸகுணமான ப்ரஹ்மம், மற்றோரிடத்தில் நிர்குணமான ப்ரஹ்மம் அல்லவெனக் காட்டப்படுகிறது.* धृतेश्च *என்று மட்டும் சொல்லாமல்,* धृतेश्च महिम्नः *என்று சொன்னதால், த்ருதியாகிய மஹிமையும், அதைத் தவிர்த்த வேறு மஹிமையும், என, 'ச' என்ற சொல்லால்*

கூட்டப்படுகிறது. த்ருதியாவது, ஆளுதல், ஶாஸனம், என அக்ஷராதிகரணத்தில் நிஶ்சயிக்கப்பட்டது.

(गू.सं.) एवं च 'स्वभावमेके कवयो वदन्ति कालं तथाऽन्ये परिमुह्यमानाः । देवस्यैष महिमा तु लोके येनेदं भ्राम्यते ब्रह्मचक्रम्' इति श्रुत्युक्तार्थप्रकाशनेन सृष्टेः वक्ष्यमाणसूत्रोक्तप्रयोजनव्यतिरेकेण स्वभावरूपत्वं न श्रुतौ विवक्षितमित्यर्थोऽपि सूचितो भवति । अथ 'य आत्मा स सेतुर्विधृतिः' इत्यत्र धारणं प्रतिपाद्यते । लोकासम्भेदकरं धारणं 'एतस्य वा अक्षरस्य प्रशासने' इत्यक्षरविद्यायां धारणं तदतिरिक्तमहिमा चेति महिमद्वयं प्रतिपादितं भवति। एवं बृहदारण्यके षष्ठे 'एष भूताधिपतिरेष सेतुः' तदतिरिक्तमहिमद्वयं प्रतिपादितम् । अत्र महिमशब्दप्रयोगेण वाक्यत्रयेऽपि महिमवान् राजा प्रतिपादित इति परब्रह्मणः राजत्वं प्रतिपादितम् ॥

(*தமிழ்*) *ஆக,* स्वभावमेके कवयो वदन्ति कालं तथाऽन्ये परिमुह्यमानाः । देवस्यैष महिमा तु लोके येनेदं भ्राम्यते ब्रह्मचक्रम्, *என்ற ஶ்ருதியில் சொல்லப்பட்ட பொருளை விளக்குவதால், ஸ்ருஷ்டிக்கு பயன், மேல் கூறப்படும் ஆட்சியைத் தவிர, ஸ்வபாவமல்ல என்பது தான் ஶ்ருதியின் கருத்து என்றும் உணர்த்தப்படுகிறது. பிறகு,* य आत्मा स सेतुर्विधृतिः, *என்னுமிடத்து, தாரணம், அதாவது, தாங்குதல், சொல்லப்படுகிறது. உலகங்கள் கலந்துவிடாது அததன் இடத்தில் நிறுத்துகையாகிற தாரணம்* एतस्य वा अक्षरस्य प्रशासने, *என்று அக்ஷரவித்யையில் தாரணமும், அதில் மிகுந்த மஹிமையும் என இரு மஹிமைகள் சொல்லிற்று. அவ்வாறே, ப்ருஹதாரண்யகத்தில் ஆறாம் அத்யாயத்தில்,* एष भूताधिपतिरेष सेतुः *என்று, மற்றொரு மஹிமை, அதாவது, அதிபதியாகும் தன்மை எனும் மிகுதி கூறப்பட்டுள்ளது. இங்கு மஹிமஶப்தத்தை வழங்கியதால், இம்மூன்று வாக்யங்களிலும் கூறின மஹிமையுடைய ராஜா, பரப்ரஹ்மம் என்று, அதை ராஜாவாகச் சொல்லிற்று.*

5. इतरपरामर्शात् स इति चेन्नासम्भवात् । (1.3.17)

(गू.सं.) एवं सूत्रैः दहरशब्दवाच्यत्वं परमात्मनस्साधितम् । अथ जीवस्यापि तत्र प्रकरणे प्रतिपादनं कुतो न भवतीति शङ्कायामाह - इतरेत्यादि । सः इतर एव इतरपरामर्शादिति चेन्न असम्भवात् अपहतपाप्मत्वयोग्यत्वेऽपि जीवस्य अपहतपाप्मत्वादिकं न संभवतीत्यत्र जाग्रत्स्वप्नसुषुप्त्यवस्थावतः जीवस्य कर्मपरवशत्वेन अपहतपाप्मत्वाद्यसम्भवः पूर्वमुक्तः, अत्र 'दहर उत्तरेभ्यः' इति प्रथमसूत्रम् । एतेन दहरविद्यावाक्यमेव विषय इति स्पष्टं बोधितं भवति । 'इतरपरामर्शात्स इति चेन्नासम्भवात्' इति सूत्रे 'एष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते' इति वाक्यं विषय इति सर्वैरभ्युपगतम् । एवमभ्युपगमे दहरविद्यावाक्यार्थपूर्तिरिदानीमेव समजनीति सर्वैरप्यभ्युपगतं भवति ॥

(*தமிழ்*) *இவ்வாறு ஸூத்ரங்களால் பரமாத்மாவின் தஹரஶப்தத்தால் குறிக்கப்படுதல் நிலைநிறுத்தப் பட்டது. பின்னர், ஜீவனையும் இந்த ப்ரகரணத்தில் கூறியுள்ளதால், அவன் ஏன் தஹரமாகக் கூடாது என ஐயமெழ, அதை விசாரிக்க உரைக்கிறார் இதர என்று. ஸ: - அவன், இதரன் தான்,* इतरपरामर्शात् इति चेन्न, असम्भवात्, अपहतपाप्मा - *குறைகளுக்கு எதிர்த்தட்டாதல் முதலிய குணங்களுக்குத் தகுதி இருந்தும், ஜீவனுக்கு விழித்தல், கனவு காணல், ஆழ்ந்த உறக்கம், எனும் நிலைகளை கர்மாவினால் அடைவதால்,* अपहतपाप्मा *முதலிய குணங்களில்லையென முதலிலேயே சொல்லப்பட்டது. இங்கு* दहर उत्तरेभ्यः *என்று முதல் ஸூத்ரம். இதனால் தஹரவித்யையின் வாக்யம் தான் விஷயம் என்று தெளிவாக்கப்படுகிறது.* इतरपरामर्शात् स इति चेन्नासम्भवात् *என்ற ஸூத்ரத்தில்,* एष सम्प्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते *என்ற வாக்யம் விஷயமென எல்லோரும் கொண்டுள்ளனர். இவ்வாறு கொள்வதால், தஹரவித்யாவாக்யத்தின் பொருள் இப்பொழுது தான் முடிவடைந்ததென எல்லோராலும் ஏற்கப்பட்டதாகிறது.*

6. उत्तराच्चेदाविर्भूतस्वरूपस्तु । (1.3.18)

(गू.सं.) एतदनन्तरम् 'उत्तराच्चेदाविर्भूतस्वरूपस्तु' इति सूत्रे उत्तरशब्देन कस्योपादानमिति चिन्तनीयम् । तत्र

सूत्रक्रमपर्यालोचनायां दहरवाक्योत्तरवाक्यमित्येव प्रतीयते, तत्र प्रजापतिविद्यावाक्यमेव भवतीति 'उत्तरात्' प्रजापतिवाक्यात् इत्युक्तम् 'एष म आमा' इति वाक्य एवान्ते 'इति ह प्रजापतिरुवाच' इति खलूपक्रमः इति सूत्रस्वारस्यं सिद्धान्ते । परमते प्रजापतिविद्यायामुत्तरत्र 'स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः' इति वाक्यस्य विषयत्वे जीवब्रह्मणोरभेदस्यैव प्रतिपिपादयिषितत्वेन तदर्थस्य सूत्रे अकथनं कुतः? तत्र बीजं किं? प्राथमिकवाक्यपरित्यागे वा किं बीजम्? 'आविर्भूतस्वरूपस्तु' इति सिद्धान्ते युक्तिप्रदर्शनमपि जीवब्रह्मणोरभेदेन स्वरसम् ॥

(தமிழ்) இதன் பிறகு, उत्तराच्चेदाविर्भूतस्वरूपस्तु என்ற ஸூத்ரத்தில், யாரைப் பற்றி கூறப்பட்டுள்ளதெனப் பார்த்தால், ஸூத்ரங்களின் வரிசைப்படி, தஹரவாக்யத்தின் அடுத்த வாக்யமெனத் தெரிகிறது. அது, ப்ரஜாபதிவாக்யமாகும். ஆக, அடுத்ததால் எனில், ப்ரஜாபதிவாக்யத்தினால் எனப்பட்டது. एष म आत्मा என்கிற வாக்யத்தின் கடைசியில் इतिह प्रजापतिरुवाच என்றுள்ளதால் ஸித்தாந்தத்தில் தான் ஸூத்ரஸ்வாரஸ்யம் உள்ளது. பரமதத்தில் ப்ரஜாபதிவித்யையில் மேல் स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः என்ற வாக்யத்தை விஷயமாகக்கொண்டதால், ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றே என்று இசையவேண்டியதால், அவ்வர்த்தத்தை ஸூத்ரத்தில் ஏன் சொல்லவில்லை, அங்கு காரணம் யாது, முதல் வாக்யம் தான் ஏன் விடப்பட்டது முதலிய கேள்விகள் எழும். आविर्भूतस्वरूपस्तु என்று ஸித்தாந்தத்தில் யுக்தி, அதாவது, ந்யாயம், கூறப்பட்டதும் ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்றென (அப்ருதக்-ஸித்தம் - பிரிக்க ஒண்ணாமையால்) ஏற்பதால் ஸ்வரஸமாகும்.

(गू.सं.) नव्यमते 'जक्षन्क्रीडन्रममाणः' इति वाक्यस्य विषयत्वकल्पनं न सूत्रकाराशयानुगुणम् । दहरविद्यावाक्यो-त्तरवाक्यसामान्यत्यागस्य निर्बीजत्वात् । जक्षणादिसूचकपदाभावाच्च । जक्षणादेः जीवमहिमरूपत्वाभावाच्च । एतेन नव्यमते असम्भवनिराकरणं न संभवति । सिद्धान्ते तु अपहतपाप्मत्वादेः साक्षात्प्रतिपादकवाक्यसद्भावात् असम्भवनिराकरणम् । आत्मशब्दस्य परमात्मनि प्रसिद्ध्या परमात्मपरमिदं वाक्यमिति नवीनानामाशयः । एवम् अङ्गीकारे 'अथ यो वेदेदं जिघाणीति स आत्मा गन्धाय घ्राणम्' इत्यादीनां बहूनां वाक्यानां गौणार्थकल्पनाप्रसङ्गात्। सूत्रकृतोऽपि नायमर्थस्सम्मतः । 'आविर्भूतस्वरूपस्तु' इत्यत्र 'अथ यो वेदेदं जिघाणीति स आत्मा' इत्यत्र वक्ष्यमाणत्वाच्च । नवीनैरप्यपहतपाप्मत्वादयः मुक्तजीवेऽप्यङ्गीक्रियन्ते ।

(தமிழ்) புதியவர்கள் மதத்தில், जक्षन् क्रीडन् रममाणः என்ற வாக்யத்தை விஷயமாகக் கொண்டது ஸூத்ரகாரரின் கருத்துக்கு ஒவ்வாதது. தஹரவித்யாவாக்யத்துக்கு அடுத்த வாக்யத்தை விட்டதற்கு காரணமில்லாததால். ஜக்ஷணம், அதாவது, சாப்பிடுதல் முதலியதைக் குறிக்கும் சொல் இல்லாததாலும், சாப்பிடுதல் முதலியன ஜீவனின் மஹிமையாக இல்லாததாலும், புதியமதத்தில் அஸம்பவ-கூடாமை-தோஷத்தைத் தடுக்க முடியாது. ஸித்தாந்தத்திலோவெனில், அபஹதபாப்மத்வம் முதலியவற்றை நேராகச் சொல்லும் வாக்யம் இருப்பதால் கூடாமையைத் தடுக்கலாம். புதியவர்கள், ஆத்மஶப்தம், பரமாத்மாவில் ப்ரஸித்தமாதலால், இவ்வாக்யம் பரமாத்மாவைக் குறிக்கிறதென்கின்றனர். இப்படி கொண்டால், अथ यो वेदेदं जिघ्राणीति स आत्मा गन्धाय घ्राणम् முதலிய பல வாக்யங்களுக்கு கௌணமான பொருள் கொள்ள வேண்டி வரும். ஸூத்ரகாரருக்கும் இவ்வர்த்தம் உடன்பாடில்லை. आविर्भूतस्वरूपस्तु என்றவிடத்து, अथ यो वेदेदं जिघ्राणीति स आत्मा என்று சொல்லப்போவதால். புதியவர்களாலும் முக்தருக்கு அபஹதபாப்மத்வம் முதலியவை உண்டென்று ஏற்கப்பட்டுள்ளது.

9. अनुकृतेस्तस्य च । (1.3.21)

(गू.सं.) एवं 'अनुकृतेस्तस्य च' इति सूत्रकर्तुः नवीनाभिमतार्थः पराभिमतार्थश्च नैव संमतः । छान्दोग्यवाक्यार्थनि र्धारणापरत्वसम्भवे तत्परित्यज्य पृथगधिकरणविषयवाक्यकल्पनायाः अन्याय्यत्वात् । सूत्रस्वारस्यविरोधाच्च । 'तमेव भान्तमनुभाति सर्वम्' इति श्रुतिर्मतद्वयेऽपि विषयतयोपात्ता । अत्र यदि विषयवाक्यत्वं सूत्रकृतामभिमतम् अभविष्यत् तदा 'अनुमानात्तस्य च' इत्येव सूत्रमकरिष्यत् । अनुकृतिः अनुकार इत्यादयः सदृशधर्मवद्बोधकाश्शब्दाः। दहरविद्यायां परमात्मनि अपहतपाप्मत्वादिधर्मानभिधाय 'परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते' इति

मुक्तस्यापि तद्धर्माविर्भावकथनेन 'य आत्माऽपहतपाप्मा' इत्यादिना तानेव धर्मान्विशिष्याभिधाय जाग्रत्स्वप्न-सुषुप्त्यवस्थानिरूपणानन्तरं जीवस्वरूपनिर्धारणपूर्वकं 'एष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः' इत्याद्यभिधानात् । ('नित्यं हि नास्ति जगति भूतं स्थावरजङ्गमम् । ऋते तमेकं पुपषं वासुदेवं सनातनम् ॥', 'भगवानिति शब्दोऽयं तथा पुरुष इत्यपि । निरुपाधी च वर्तेते वासुदेवे सनातने ॥' इति स्मृतिद्वयेन च) एवमभिधानेन पूर्वपरमात्मगतत्वेनोक्तानां हि जीवेऽङ्गीकारस्सम्भवति ।

(தமிழ்) अनुकृतेस्तस्य च என்று ஸூத்ரம் செய்ததால் புதியவர்களும் பரமதத்தினரும் கொண்ட பொருள் ஒவ்வாததே. சாந்தோக்யவாக்யத்தின் பொருளைத் தீர்மானிப்பது கூடும்போது, அதை விடுத்து, வேறு அதிகரணவிஷயவாக்யத்தைக் கல்பிப்பது சரியல்லாததால். மேலும், ஸூத்ரஸ்வாரஸ்யத்துக்கும் முரண்படுகிறது. तमेव भान्तमनुभाति सर्वम् என்ற ஶ்ருதி இருமதத்திலும் விஷயமாக ஏற்கப்பட்டது. இங்கு இது விஷயவாக்யமாக ஸூத்ரகாரர் நினைத்திருந்தால் अनुमानात्तस्य च என்றே ஸூத்ரம் செய்திருப்பார். अनुकृति, अनुकारம் முதலிய சொற்கள் ஒத்த குணங்களை உடையவற்றைக் குறிப்பவை. தஹரவித்யையில் பரமாத்மாவுக்கு அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களைச் சொல்லி, परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते என்று முக்தனுக்கும் அக்குணங்கள் வெளிப்படையாகுமென்பதால், य आत्मा अपहतपाप्मा முதலியவற்றால் அதே குணங்களையே குறிப்பிட்டுச் சொல்லி, விழித்தல், கனவு காணல், ஆழ்ந்த உறக்கம், எனும் நிலைகளை விளக்கின பிறகு ஜீவஸ்வரூபத்தைத் தீர்மானித்து, एष सम्प्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते स उत्तमः पुरुषः முதலியவற்றைச் சொல்வதால், முதலில் பரமாத்மாவுக்குச் சொன்னவற்றுக்கு அல்லவோ ஜீவனிடமும் ஏற்றல் கூடும்.

10. अपि स्मर्यते ॥ (1.3.22)

(गू.सं.) स्वगतधर्मसम्बन्धः परमात्मसम्बन्धः पूर्वं दहरवाक्यैरेव सिद्धः । 'स उत्तमः पुरुषः' इति वाक्यं तु 'दहरोऽस्मिन्नन्तर आकाशः' इमि प्रागुक्तदहराकाशाभेदबोधनार्थः प्राप्यस्य परत्वोक्त्या अनन्तरं तस्यैव उत्तमशब्देन निर्देशौचित्यात् । अविशेषेण सर्वहृदयान्तर्वर्तित्वस्य प्रतिपादने पुरुषशब्दार्थस्यापि प्रतिपादनप्रायत्वात् । पुरुषशब्दार्थो वासुदेवः 'यद्भूतेषु वसत्यपि सर्वानुग्राहकत्वेन' इति ब्रह्मबिन्द्वनुरोधेन 'नित्यं हि नास्ति जगति भूतं स्थावरजङ्गमम्। ऋते तमेकं पुरुषं वासुदेवं सनातनम् ॥', 'भगवानिति शब्दोऽयं तथा पुरुष इत्यपि । निरुपाधी च वर्तेते वासुदेवे सनातने ॥' इति स्मृतिद्वयेन च सर्वहृदयपुण्डरीके स्थितेर्निश्चयेन राजकुमारनयेन राजपुत्राणामन्तरङ्गभूतानां राजसमानभोगवत्, अत्राप्यपहतपाप्मत्वादिज्ञानानन्दाद्यनन्तसर्वगुणसाम्यं संभवतीत्याशयः सूत्रकर्तुरिति निर्मत्सराणां स्फुटम् । इममर्थं गीताचार्योऽभिप्रैतीति सूचयति - अपि स्मर्यत इति ॥

(தமிழ்) தன்னிடம் உள்ள தர்மங்களின் தொடர்பும், பரமாத்மாவின் ஸம்பந்தமும், முதலில் தஹரவாக்யத்தாலேயே ஏற்பட்டன. स उत्तमः पुरुषः என்ற வாக்யமோவெனில், दहरोऽस्मिन् अन्तर आकाशः என்று முன்கூறிய தஹராகாஶத்தின் ஒற்றுமையைக் காட்டுகிறது. அடையத்தக்கதைப் பரம் என்று கூறி, பின்னர், அதையே, உத்தம, அதாவது, உயர்ந்த, என்ற அடைமொழியால் காட்டுவதால். வேறுபாடின்றி எல்லோருடைய இதயத்தின் உள்ளிருப்பதைக் கூறினால், புருஷஶப்தத்தையும் விவரித்ததாகவே ஏற்படும். புருஷஶப்தத்தின் பொருள் வாஸுதேவன், यद्भूतेषु वसत्यपि सर्वानुग्राहकत्वेन என்ற ப்ரஹ்மபிந்து வாக்யப்படி. नित्यं हि नास्ति जगति भूतं स्थावरजङ्गमम् । ऋते तमेकं पुरुषं वासुदेवं सनातनम् ॥ भगवानिति शब्दोऽयं तथा पुरुष इत्यपि । निरुपाधी च वर्तेते वासुदेवे सनातने ॥ எனும் இரண்டு ஸ்ம்ருதிகளாலும், எல்லோருடைய இதயத்தாமரையில் இருத்தலால், நிஶ்சயமாக ராஜகுமாரந்யாயப்படி, ராஜபுத்ரர்களின் மிக நெருங்கியவர்களுக்கும் ராஜாவுக்கு ஸமமான ஆநந்தம் கிடைப்பதுபோல், இங்கும், அபஹதபாப்மத்வம் முதலியவை, அறிவு, மகிழ்ச்சி முதலிய எண்ணற்ற எல்லா குணங்களும் ஸமமாக ஏற்படுகிறது என்று ஸூத்ரகாரரின் கருத்து என்பது பொறாமையற்றவர்களுக்கு விளங்கும். இவ்வர்த்தத்தைத் தான் கீதாசார்யனும் குறிக்கிறான் எனக் காட்டுகிறது, अपि स्मर्यते என்ற ஸூத்ரம்.

இவ்வாறு, தஹராதிகரண-கூடார்த்தஸங்க்ரஹத்தின் மொழிபெயர்ப்பை அடியேனின் சிற்றறிவுக்கு

எட்டினவரை செய்துள்ளேன். அடியேனுக்கு ப்ராசார்யரான க்ரந்தகர்தாவினுடையவும், அடியேனின் ஶாஸ்த்ர-ஆசார்யரான மஹாவித்வான், மாதீஹள்ளி லக்ஷ்மணாசார் ஸ்வாமியின் அருளை நினைத்தும், வர்த்தமான ஶ்ரீபரகால ஸ்வாமியின் அனுக்ரஹத்தைக் கோரியும் தான் இந்த ஸாஹஸமான பணியில் இறங்கினேன்.

ஒரு குறிப்பு - இங்கு இவ்வதிகரணத்திய எல்லா ஸூத்ரங்களின் முழு அர்த்தமும் விளக்கப்படவில்லை. வ்யாஸம் மிகவும் நீண்டுவிடும் என்பதாலும், காலக்ஷேபத்தால் அறியத்தக்க விஷயங்களில் எழுத்தின் மூலம் விரிவு கூடாதெனவும், கூடார்த்தஸங்க்ரஹ க்ரந்தத்தின் மேன்மையைத் தெரிவிப்பதே இங்கு நோக்கமாகையாலும் சுருக்கமாகவே எழுதப்பட்டது. வடமொழி மேற்கோள்களின் தமிழாக்கமும் செய்யப்படவில்லை. மஹான்கள் இங்குற்ற தோஷங்களைப் பொருட்படுத்தாது அனுக்ரஹிக்கப் ப்ரார்த்திக்கிறேன்.

गूढार्थसङ्ग्रहोक्तायाः दहराधिकृतेरिह । वात्स्यो रामानुजो दासः द्राविड्या लेखनं व्यधात् ॥

अनेन प्रीयतां श्रीमान् शारीरकनयोदितः । लक्ष्मीहयास्यो गुरुभिः कृपापरवशैः सह ॥

शुभमस्तु ॥